Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 24, 2022

செவ்வாய்க்கிழமை மே 24, 2022 | ஒளி: 08 கதிர்: 004 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE





## சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை

# 19ஆக அதிகரிப்பு

### டக்ளஸ், நஸீர் அமைச்சர்களாகினர்

### பெண்களே இல்லாத அமைச்சரவை

### மலையக பிரதிநிதிகளும் இல்லை

### நிதி நெருக்கடிக்குள் நிதியமைச்சர் நியமனம் இல்லை

சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஜனாதிபதி, பிரதமர் இல்லாமல், 19 பேர் இதுவரையிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, ரமேஷ் பத்திரண ஆகியோருக்கு மேலதிகமாக ஒவ்வோர் அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கத்தில் அமைச்சரவை நியமனங்கள் மூன்று தடவைகள் வழங்கப்பட்டுள்ள போதும், நாடு கடுமையான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், நிதியமைச்சர் ஒருவர், நேற்று (23) வரையிலும் நியமிக்கப்படவில்லை.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க, மே.11 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டதன் பின்னர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை கடந்த அரசாங்கத்திலிருந்து விலகி, சுயாதீனமாக இயங்கிய நிலையில் அக்குழுக்களில் இருந்து, அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.


தொடர்ச்சி P2

---

## புதிய வரவு செலவு திட்டம் குறித்து

# பிரதமர் தீவிர ஆராய்வு

### வர்த்தக சம்மேளன, திறைசேரி மற்றும் பொருளாதார ஆலோசகர்கள் குழாமுடனும் கலந்துரையாடல்



இலங்கையின் நெருக்கடி நிலைமையில் உருவாக்கப்படும் புதிய வரவு செலவு திட்டம் குறித்து வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள், திறைசேரி மற்றும் பொருளாதார ஆலோசகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை சந்தித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று (23) கலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, மூலதனச் செலவினங்களை கணிசமாகக் குறைக்கும் வகையில் புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டில் உணவுப் பஞ்சம் ஒன்றினை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், உக்ரேன் போர் காரணமாக உள்நாட்டில் விவசாயத்துறைக்கான உர தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் உணவுப்பஞ்சத்தை குறைக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

---

## மே 9 களேபர கைது சர்ச்சை

# ஜே.வி.பிக்கு எதிராக அரசியல் சூனிய வேட்டை

### சிவப்பு சட்டை போட்டால் ஜே.வி.பியா? என்றும் கேள்வி

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை தொடர்பில் கைது செய்யப்பட்ட பெரும்பான்மையானவர்கள் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அங்கத்தவர்கள் என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள கட்சியின் பிரசார செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஜே.வி.பிக்கு எதிராக சிலர் அரசியல் சூனிய வேட்டையில் ஈடுபட்டு வருவதாகவும், அரசியல் பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தினார்.

தொடர்ச்சி P2

---

# தென்னகோனை இடம்மாற்றவும்

### சட்டமா அதிபர் பணிப்புரை

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

---



# அமெரிக்க தூதுவருடன் இ.தொ.கா சந்திப்பு

### உதவியையும் கோரினர்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியூன் சங்குக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்றது.

இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு அமெரிக்கா உதவி வழங்க வேண்டும் என இதன்போது இ.தொ.கா அமெரிக்க தூதுவரிடம் கோரிக்கை விடுத்தது.

தொடர்ச்சி P2

---

# நாட்டை வந்தடைந்தது பெற்றோல் கப்பல்




இந்தியாவிடமிருந்து எரிபொருளுக்காக ஒதுக்கப்பட்ட கடனுதவித்திட்டத்தின்கீழ் 40,000 மெற்றிக் தொன் பெற்றோல் அடங்கிய கப்பல், கொழும்பு துறைமுகத்தை நேற்று (23) வந்தடைந்ததாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

சனிக்கிழமை (21) இந்திய கடனுதவியின் கீழ் மற்றொரு 40,000 மெற்றிக் தொன் டீசல் கொழும்பை வந்தடைந்தது.

தொடர்ச்சி P2

---

# மலேசியாவை இன்னோர் இலங்கையாக மாற்ற வேண்டாம்

### மலேசிய பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தால் சர்ச்சை

மலேசியாவை இன்னோர் இலங்கையாக மாற்ற வேண்டாம் என்று எச்சரித்தமைக்காக சிறைக்குச் செல்லத் தயாராக இருப்பதாக மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் லிம் கிட் சியாங் தெரிவித்துள்ளார். மற்றொரு நபரை எரிச்சலூட்டும், துஷ்பிரயோகம் செய்யும், அச்சுறுத்தும் அல்லது துன்புறுத்தும் நோக்கத்துடன் ஆபாசமான, அநாகரீகமான,

தொடர்ச்சி P2

---

## இலங்கை மக்களுக்கு நிதி சேகரிக்க

# தேநீர்க் கடையில் மொய் விருந்து

இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், தமிழ்நாடு மாநிலம் புதுக்கோட்டை அருகே உள்ள தேநீர் கடையொன்றில் மொய் விருந்து நடத்தி நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை, மேட்டுப்பட்டியில் உள்ள தேநீர் கடையொன்றில் நேற்று முன்தினம் (22) காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மொய் விருந்து நடத்தப்பட்டுள்ளது. கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தேநீரை பருகிவிட்டு தங்களால் இயன்ற நிதி உதவியை இலங்கை மக்களுக்காக வழங்க வேண்டும் என பதாதையொன்றும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

---

## 21ஆம் திருத்த சட்டமூல விவகாரம்

### தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணிகளுடன்

# கலந்துரையாடுகின்றார் ஜனாதிபதி

■ ஆர்.யசி



அரசியலமைப்பின் 21 ஆம் திருத்த சட்டம் குறித்து பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் தனித்தனியாக ஆராய்வதாகவும், சட்டமூலத்தை எப்போது பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவது என்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படாது அமைச்சரவையிலும் இழுத்தடிப்பு நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

---

# 3ஆம் தரப்பிடமிருந்து எரிபொருள் வாங்காதீர்

### பொதுமக்களிடம் அமைச்சர் கஞ்சன கோரிக்கை



மூன்றாம் தரப்பினரிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதை தவிர்க்குமாறு, பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர, சிலர் எரிபொருளை சேகரித்து அதில் கலப்படம் செய்து, அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அமைச்சர், நேற்று (23) தெரிவித்தார்.

அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் எனவும் அவ்வாறு கலப்படம் செய்து அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்வோர் தொடர்பில் அறிவிக்குமாறும் எரிசக்தி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

---

# கப்ராலுக்கு மீண்டும் அழைப்பாணை

### ஜூலை 25 வரை பயணத்தடை நீடிப்பு



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை எதிர்வரும் ஜூலை மாதம் 25ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு மீண்டும் அழைப்பாணை பிறப்பித்த கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, அவருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை அன்றைய தினம் வரை நீடிக்குமாறும், நேற்று (23) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2

---

## போராட்டத்தில் கலந்துகொள்வது குறித்து

# தமிழர்களே முடிவெடுக்க வேண்டும்



காலி முகத்திடல் போராட்டத்தில் தமிழர்கள் கலந்துகொள்ள வேண்டுமா இல்லையா என்பது பற்றி அவர்களே முடிவெடுக்க வேண்டும். மனித உரிமைகள் மீறல்கள், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களை காலி முகத்திடல் போராட்டத்தில் உள்வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

---

## கராப்பிட்டி வைத்தியசாலையில்

# நோயாளிகளை அனுமதிக்க வரையறை விதிப்பு

கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் நோயாளிகளை அனுமதிக்கும் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் ஷெல்டன் பெரேரா தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக, வைத்தியசாலை ஊழியர்கள் சேவைக்கு சமூகமளிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 19ஆக அதிகரிப்பு

முதலாவது அமைச்சரவை மே.14 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. அதன்பின்னர் மே. 20 மற்றும் மே. 23 ஆம் திகதிகளில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, 19 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் அடங்கிய சிறிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட் ஆகியோரும் அமைச்சர்களாக நேற்று (23) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர், மலையகத்தை அல்லது இந்திய வம்சாவளியினரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவைக்குள் ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி, பெண்கள் எவருமே இதுவரையிலும் அமைச்சர்களாக நியமிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து, நேற்று (23) இடம்பெற்ற, அமைச்சரவை நியமனத்தில், 08 பேர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னிலையில், அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். அதில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், மஹிந்த அமரவீர அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

### மே.23 அமைச்சர்களாக நியமிக்கப்பட்டோர் விவரம்

01. டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழில்
02. பந்துல குணவர்தன - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகம்
03. கெஹலிய ரம்புக்வெல்ல - நீர் வழங்கல்
04. மஹிந்த அமரவீர - கமத்தொழில் அமைச்சர், வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு
05. ரமேஷ் பத்திரன - கைத்தொழில்
06. விதுர விக்கிரமநாயக்க - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்
07. அஹமட் நஸீர் - சுற்றாடல்
08 ரொஷான் ரணசிங்ஹ - நீர்ப்பாசன அமைச்சர், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்.

### மே.20 அமைச்சர்களாக நியமிக்கப்பட்டோர் விவரம்

01. நிமல் சிறிபால டி சில்வா - துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள்
02. கலாநிதி சுசில் பிரேமஜயந்த - கல்வி
03. கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல - சுகாதாரம்
04. கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ - நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம்
05. ஹரின் பெர்னாண்டோ - சுற்றுலா மற்றும் காணி
06. ரமேஷ் பத்திரன - பெருந்தோட்ட கைத்தொழில்
07. மனுஷ நாணயக்கார - தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு
08. நலின் பெர்னாண்டோ - வணிகம், வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு
09. டிரான் அலஸ் - பொதுமக்கள் பாதுகாப்பு

### மே.14 அமைச்சர்களாக நியமிக்கப்பட்டோர் விவரம்

01. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - வெளிநாட்டலுவல்கள்
02. தினேஷ் குணவர்தன - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
03. பிரசன்ன ரணதுங்க - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
04. காஞ்சன விஜேசேகர - மின்சாரம் மற்றும் வலுசக்தி

# பிரதமர் தீவிர ஆராய்வு

மேலும், பொருளாதார உரிமைகளை உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பு அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடிய போட்டி சமூக சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை டிஜிட்டல் மயமாக்க வேண்டும் என நிபுணர்களின் பக்கமிருந்து பிரதமருக்கு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க தூதுவருடன் இ.தொ.கா சந்திப்பு

அத்துடன், இலங்கைகான அமெரிக்காவின் பொருளாதார, கலாசார, சமூக ரீதியான உதவித்திட்டங்களில் எதிர்காலத்தில் மலையக மக்கள் உள்வாங்கப்பட வேண்டும் என இ.தொ.கா அமெரிக்க தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தது.

மேலும் உலக வங்கி, IMF இலங்கைக்கு உதவி வழங்குவதில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என கலந்துரையாடப்பட்டது.

# தென்னகோனை இடம்மாற்றவும்

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகைக்கு முன்பாக உள்ள மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளை அடுத்தே இந்த இடமாற்ற பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 22 பேரின் வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறும், போதிய ஆதாரங்கள் இருந்தால் அவர்களை கைது செய்யுமாறும் சட்டமா அதிபர் கடந்த வாரம் பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினருக்கு பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவை இன்னொரு இலங்கையாக மாற்ற வேண்டாம்

பொய்யான, அச்சுறுத்தும் அல்லது புண்படுத்தும் தன்மை கொண்ட எந்தவொரு தூண்டுதலையும் நான் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலேசியாவிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதுடன் இதன் காரணமாக மக்கள பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன், கொவிட் 19 தொற்று நோய் பரவல் மற்றும் அரசியல்வாதிகளின் ஊழல்கள் காரணமாக மலேசியாவில் இந்த நிலைமை உருவாகி இருப்பதாக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்நிலையில் இலங்கையின் நிகழ்கால நிலவரங்களை கருத்தில் கொண்டு மலேசியாவையும் மற்றுமொரு இலங்கையாக மாறக் கூடாது என லிம் கிட் சியாங் தெரிவித்துள்ளார்.

‘இலங்கையில் நடந்தது போல் மலேசியாவின் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் கோபமடைந்த போராட்டக்காரர்களால் தீவைக்கப்படுமா?’ என லிம் தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறான பதிவொன்றை அவர் இட்டுள்ளார். இவரது கருது குறித்து அச்சுறுத்தல் விளைவிக்கும் ஒரு கருத்தை கொண்டிருந்ததாகக் தெரிவித்து லிம் கிட் சியாங்கின் டுவிட் தொடர்பாக மலேசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் லிம் இந்த கருததுக்களை வெளியிட்டுள்ளார்.

## தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணிகளுடன்
# கலந்துரையாடுகின்றார் ஜனாதிபதி

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் 21 ஆம் திருத்த சட்டம் திருத்தம் நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அது குறித்த தெளிவான தீர்மானம் எடுக்கப்படவில்லை என அமைச்சரவை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. 21 ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவந்து மீண்டும் 19 ஆம் திருத்தத்தின் யோசனைகளை பலப்படுத்த வேண்டும் எனவும், நிறைவேற்று அதிகாரங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்ட போதிலும் அதற்கான கால வரையறை குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் 21 ஆம் திருத்தம் குறித்து பெரிதாக எந்தவித கருத்துகளையும் முன்வைக்காது உள்ள நிலையில் தற்போது அவருடைய தனிப்பட்ட சட்டத்தரணிகள் குழாமில் 21 ஆம் திருத்தம் குறித்து கலந்துரையாடி வருகின்றாராம். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய முடியுமா என்பது குறித்து ஆராய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறு இருப்பினும் 21ஆம் திருத்தத்தை ஆதரித்த சகலரும் தற்போது அமைச்சரவையில் இருக்கின்ற காரணத்தினால் இது பாரிய விமர்சனத்தை உருவாக்கிக்கொண்டுள்ளதாக தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சகலரும் இணக்கம் தெரிவித்தால் அடுத்த நான்கு வாரங்களில் 21 ஆம் திருத்தத்தின் தொழில்நுட்ப ரீதியிலான அறிக்கையை கொண்டுவர முடியும் எனவும், அதனை தொடர்ந்து பாராளுமன்ற விவாதத்துடன் தேவையான மாற்றங்களை செய்து நிறைவேற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

# ஜே.வி.பிக்கு எதிராக அரசியல் சூனிய வேட்டை

ஜே.வி.பியினர் வன்முறையில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பொலிஸ்மா அதிபரை, நேற்று (23) சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜே.வி.பி.யை சேர்ந்தவர்கள் அல்ல என்பதும் பெரும்பான்மையானவர்கள் ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான அறிக்கை தொடர்பில் தான் அவதானிப்பதாக பொலிஸ் மா அதிபர் கூறியதாகவும் ஹேரத் எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை, சிவப்பு சட்டை அணிவதால் மட்டும் ஒரு தனிநபரை ஜே.வி.பி ஆதரவாளராக மாற்ற முடியாது என்று தெரிவித்த ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, இந்த அமைதியின்மையில் ஜே.வி.பியின் கரம் விளையாடுவதாக சமூக ஊடகங்கள் ஊடாக சமூகத்தில் ஒரு கருத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# நோயாளிகளை அனுமதிக்க வரையறை விதிப்பு

தற்போதைய சூழ்நிலையில் 50 சதவீத ஊழியர்களே சேவைக்கு சமூகளிப்பதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களை அனுமதிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டை வந்தடைந்தது பெற்றோல் கப்பல்

மேலும், 12 தொகுதிகளாக 400,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான எரிபொருள் தொகுதி ட்ரோம் ஹெல்விக் கப்பல் மூலமாக கடந்த 15ஆம் திகதியன்று நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள், கொழும்பு துறைமுகத்தை நேற்றுமுன்தினம் (22) வந்தடைந்ததுடன், அவை இலங்கை பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேநீர்க் கடையில் மொய் விருந்து

இதேவேளை, தமிழகத்தின் பரமக்குடியில் தரம் மூன்றில் கல்வி பயிலும் கோபிகா ஸ்ரீ எனும் மாணவி சைக்கிள் வாங்குவதற்காக உண்டியலில் சேமித்த பணத்தை இலங்கை நிவாரண நிதிக்காக வழங்கியுள்ளார்.

தான் உண்டியலில் சேர்த்து வைத்திருந்த 2,000 இந்திய ரூபாயை அவர் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் கையளித்ததாக ‘த ஹிந்து’ செய்தி வெளியிட்டுள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்ய நன்கொடை வழங்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 3ஆம் தரப்பிடமிருந்து எரிபொருள் வாங்காதீர்

மேலும், நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 95 ஒக்டேன் பெற்றோல் நேற்று (23) முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், இரண்டு எரிபொருள் சரக்குக் கப்பல்கள் இறக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆறு வாரங்களுக்குத் தேவையான 95 ஒக்டேன் பெற்றோல் கையிருப்பு நாட்டில் தற்போது இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எனவே 95 ஒக்டேன் பெற்றோலை பயன்படுத்துபவர்கள் 92 ஒக்டேன் பெற்றோல் வரிசையில் நிற்க வேண்டாம் எனவும் அதற்கு பதிலாக 95 ஒக்டேன் பெற்றோலை இன்று (23) முதல் பெற்றுக்கொள்ளுமாறும் எரிசக்தி அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே, தொடர்ச்சியாக நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பல நிரப்பு நிலையங்களில் நேற்றும் (23) நீண்ட வரிசைகளிலே மக்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

# கப்ராலுக்கு மீண்டும் அழைப்பாணை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பாணை இன்னும் தமது சேவை பெறுநருக்கு கிடைக்கவில்லை என்றும் அந்தக் காரணத்தினாலேயே தனது சேவை பெறுநர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் மன்றுக்கு அறிவித்தார்

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 500 மில்லியன் அமெரிக்க டொலர் யாருக்கு வழங்கப்பட்டது என்பது குறித்த விரிவான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் தாக்கல் செய்த தனிப்பட்ட மனுவில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2005 முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு, 10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக தண்டனைச் சட்டத்தின் 388ஆவது பிரிவின் கீழ் கப்ரால் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாகவும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கு முன்னாள் ஆளுநரும் பொறுப்பு எனவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களே முடிவெடுக்க வேண்டும்

வடக்கில் உள்ள மக்கள் நீண்ட காலமாக அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டுள்ளனர். அதுவும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக போராடிக்கொண்டுள்ளனர். எனவே அவர்களுக்கு இது குறித்து கூற வேண்டிய தேவை இல்லை. இதில் பங்குபற்ற வேண்டுமா இல்லையா என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். எவ்வாறு இருப்பினும் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளான மனித உரிமை மீறல்கள், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் ஆகியவற்றை காலி முகத்திடல் போராட்டத்தில் உள்வாங்கிக்கொண்டதாக தெரியவில்லை. எனினும் இப்போது ஒரு சில விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதை அவதானிக்கின்றோம். நினைவேந்தல் போன்றவற்றை அவதானிக்க முடிந்தது. ஆனால் தமிழ் மக்களை பாதித்த மற்றும் பாதிக்கும் விடயங்களை சிங்களவர்கள் இன்னமும் முழுமையாக உள்வாங்கவில்லை.

காலி முகத்திடல் போராட்டத்தில் உள்ள பிரதான ஒரேயொரு நிபந்தனை ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்பதாகும். அதேபோல் ஊழல் ஒழிப்பு மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும் என்ற ஓரளவு சகல தரப்பும் இணக்கம் தெரிவிக்கும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை தவிர வேறு எந்தவொரு பொது நிபந்தனையும் காணப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய அவசரகால நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டயலொக், MAS, Hemas மற்றும் CBL ஆகியவற்றின்

# ‘மனிதநேய ஒன்றிணைவு’

**இதுவரை 10,000 குடும்பங்களைச் சென்றடைந்துள்ளது.**

### அனைத்து பெரு நிறுவனங்களையும் நாடளாவிய ரீதியிலான மேற்படி அவசர நிவாரணப் பணியில் இணையுமாறு அழைப்பு

தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், நாடு முழுவதும் மிகவும் பாதிக்கபட்டுள்ள சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் நோக்கிலான, ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண முயற்சியானது, தற்போதைக்கு அத்தியாவசிய தேவையுடைய 10,000 குடும்பங்களுக்கு இந்நிவாரணம் சென்றடையும் வகையில் அதன் முதலாவது மைல்கல்லை எட்டியுள்ளது.

மேற்படி செயற்றிட்டத்தின் நிறைவேற்று பங்காளியான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் PwC Sri Lanka உட்பட ஒருமித்த எண்ணம் கொண்ட பங்காளிகளுடன் கைகோர்த்தவாறு, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC மற்றும் CBL குழுமம் ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்த ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகும். நாடளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் அடிப்படைத் தேவைகள் எதுவுமே இல்லாமல் அவதியுறும் 200,000ற்கும் மேற்பட்ட பாதிக்கபட்டுள்ள வறிய குடும்பங்கள் மற்றும் சமூகங்களை சென்றடையும் வகையிலான உன்னத நோக்கிலேயே இந்த நிவாரண திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ITN, சியத்த, சுவர்ணவாஹினி, டிவி தெரண, வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சிக்கு ஊடக அனுசரணையை வழங்கி வருகின்றன.

அதற்கமைய, தற்போது நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களிலும் குறித்த அவசரகால நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
மேலும், பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, இலங்கை முழுவதிலும் உள்ள 200,000க்கும் மேற்பட்ட பாதிக்கபட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதை இலக்காக கொண்ட இந்த நிவாரண பணியில் ஒன்றிணைய முன்வருமாறு அனைத்து நிறுவனங்களையும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ அழைப்பு விடுக்கின்றது.

மனிதநேய ஒன்றிணைவு நிவாரண பணிகள் குறித்து மேலதிக தகவல்களை - https://www.dialog.lk/corporate மூலம் அறிய முடியும்.

மனிதநேய ஒன்றிணைவு
Sarvodaya Dialog MAS HEMAS CBL

முறையான சர்வகட்சி அரசாங்கத்தில்

# பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளத் தயார்

■ பா.நிரோஸ்

தற்போதைய நெருக்கடி நிலைமைகளில் நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, முறையாக அமைக்கப்படும் அனைத்து கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கத்தில், தமக்கு வழங்கப்படும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக 43 ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க எம்.பி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சரவை மேற்பார்வைக்குழு அமைத்தல், ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய அமைச்சின் அதிகாரிகள் நீக்கப்படுதல், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஏற்றே இடைக்கால அரசாங்கம் ஒன்று நியமிக்கப்பட வேண்டும். அதனைவிடுத்து சர்வகட்சி அரசாங்கம் என்பது சலூன் கடையை திறந்து அங்கும், இங்கும் நபர்களைப் பிடிப்பதுபோல அல்ல. ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சின் அதிகாரிகள் அனைவரையும் பதவிகளில் இருந்து விலக்க வேண்டும்.



ஜூன் மாத பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் 21ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கமே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதையும் 21இன் ஊடாகத் தடை செய்ய வேண்டும்.

தேசிய, சர்வதேச ரீதியாக அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பது அவசியமான ஒன்றாக உள்ளது. ராஜபக்ஷர்களின் யுகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதும் தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியமான ஒன்றாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்அஜித் நிவாட்கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் ஆர்டிகல உள்ளிட்டோர் நாட்டுக்கு ஏற்படுத்தியப் பேரழிவுகளை நாம் இப்போது மறந்துள்ளோம் என்றார்.

அமைச்சுப் பதவியை ஏற்றிருப்பதால்

# சு.கவுக்கு பாதிப்பில்லை

நான் அமைச்சுப் பதவியை ஏற்றிருப்பதால் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அமைச்சு பதவியை பெறுவதற்கு முன்னர் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தான் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விவசாயம், வன ஜீவராசிகள், வன பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியிடம் நியமனக்கடிதத்தை நேற்று (23) பெற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதியும் பிரதமரும் அழைப்பு விடுத்திருந்தனர். அமைச்சு பதவியை பெறுவதற்கு முன்னர் கட்சி தலைவரான மைதிரிபால சிறிசேனவுக்கு நான் அறிவித்திருந்தேன்.

அரசாங்கம் வீழ்ந்துவிடாத வகையில் செயற்பட வேண்டும். பொறுப்புகளை எவராவது ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே நான் அமைச்சு பதவிகளை ஏற்றிருப்பதால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாது. அதுபோல கட்சியிலிருந்து நான் விலகப்போவதும் இல்லை.



**“ அரசாங்கம் வீழ்ந்து விடாத வகையில் செயற்பட வேண்டும். பொறுப்புகளை எவராவது ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே நான் அமைச்சு பதவிகளை ஏற்றிருப்பதால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாது. அதுபோல கட்சியிலிருந்து நான் விலகப்போவதும் இல்லை**

விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருள் உரத்தை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# நன்றி நவின்றது கூட்டமைப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்பினதும், எதிர்க்கட்சி உறுப்பினர் மனோ கணேசனினதும் கோரிக்கையை ஏற்று முழு இலங்கைக்கும் நிவாரண பொருட்கள் அனுப்பி வைத்த தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதாகவும், எமது உறவுகள் இலங்கைக்கு செய்த இந்த உதவி குறித்து நாம் பெருமை கொள்கிறோம் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# உணவுக்கான கலவரங்கள் வெடிக்கும்

■ பா.நிரோஸ்

ஓரிரு மாதங்களில் நாட்டில் ஏற்படப்போகும் உணவுப் பஞ்சத்தை தடுக்க அரசாங்கம் தவறினால், நாட்டில் உணவுக்கான கலவரங்கள் வெடிக்குமென 43 ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க எம்.பி எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார், அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் மொத்த இடப்பரப்பில் மூன்றிலிரண்டு இடப்பரப்பு விவசாய நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. எனினும் தற்போது அரசாங்கம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உட்பட்ட இடங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவித்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உட்பட்ட இடங்கள் மாத்திரமல்ல பாடசாலைகள், இராணுவ முகாம்கள் ஆகியவற்றிலும் உள்ள இடங்களை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டும்.

இன்னும் ஓரிரு மாதங்களில் ஏற்படப்போகும் உணவுப் பஞ்சத்திலிருந்து நாட்டை மீட்க இதுபோன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடவில்லை என்றால், நாட்டில் உணவுக்கான கலவரம் ஏற்படும் எனவும், உணவுப் பொருட்கள், எரிபொருளை முறையாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# புதிய அமைச்சரவையிலும் தோல்வியடைந்த பழைய அமைச்சர்களே

■ பா.நிரோஸ்

சரிந்து விழும் அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்கும் எண்ணம் ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க,தோல்வியடைந்த பழைய அமைச்சர்களே புதிய அமைச்சரவையிலும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் க.பொ.த சாதாரண தர பரீட்சை மாணவர்கள் பரீட்சை எழுதி வருகிறார்கள். இவ்வாறான நிலையில் தற்போது சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்கு இந்த மாணவர்களுக்கு முடியாதுபோனால், மாணவர்களின் வாழ்க்கையில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படும்.

கடந்த வாரத்தில் இரு சந்தர்ப்பங்களில் 13 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். நேற்றும் 10 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 25 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. நாடு பாரதூரமான நிலையில் வீழ்ந்து கிடக்கும் போது, தங்களுக்கு விரும்பியவாறு அமைச்சர்களை காலத்துக்குக் காலம் நியமிப்பது பாரதூரமான தவறு எனவும் தெரிவித்தார்

தற்போதும் பழைய அமைச்சர்களே மீண்டும் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் தோல்வியடைந்தவர்கள் என்றே மக்கள் கூறுகிறார்கள். இந்த நியமனங்களால் மக்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை பாதுகாப்பதற்காகவே பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக உதயங்க வீரதுங்க கூறுகிறார்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களின் போராட்டத்தை ரணில் காட்டிக்கொடுத்துள்ளார். நாட்டில் தற்போது டீசல், பெற்றோல் தட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. இதனால் வரிசைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. புதிய அரசாங்கமாக தற்போதைய அரசாங்கத்தை காட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் பழைய அரசாங்கமே தற்போதும் காணப்படுகிறது. ஜனாதிபதி, ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும். இதுவே நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு ஒரே தீர்வு எனவும் தெரிவித்தார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror www.tamilmirror.lk
பதிவு செய்வதற்கு

Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

# பெற்றோல் மாஃபியா

## பொலிஸ் சாஜனும் ஓய்வு பெற்ற இராணுவ வீரரும் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேசததில் இருந்து அம்பாறை மகா ஓயா பிரதேசத்துக்கு பெற்றோலை கடத்திச் சென்ற இருவர், நேற்று முன்தினம் (22) கைது செய்யப்பட்டனர்.

மகாஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் 45 வயதுடைய பொலிஸ் சாஜன்ட் மற்றும் 41 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ வீரர் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டனர்.



சந்தேகநபர்கள் பயணித்த பிக்கப் ரக வாகனத்தை, வெல்லாவெளி பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடியில் நிறுத்தி பொலிஸார் சோதனையிட்டபோது, அந்த வாகனத்தில் 910 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து வியாபாரத்துக்காக கலன்களில் பெற்றோல் மறைத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதையடுத்து பிக்கப் ரக வாகனத்தில் பயணித்த பொலிஸ் சாஜன்ட் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

“யாழ்ப்பாண மக்கள் சிறந்தவர்கள்”

# பொலிஸார் புகழாரம்

■ என்.ராஜ்

ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாண மக்கள் சிறந்தவர்கள் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என்.பி லியனகே தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட சம்பவங்களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எவ்விதமான வன்முறைகளிலோ, எதிர்ப்பு நடவடிக்கையிலோ ஈடுபடாமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் நேற்று (23) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், “ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில்




உள்ள மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில், பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமல் முன்னெடுத்து வருகின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள். எனவே, பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

“அத்தோடு, யாழ். மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கவும்.

“பரீட்சை காலங்களில் நிபந்தனைகளுடன் மாத்திரமே ஒலிபெருக்கி அனுமதியை பொலிஸார் வழங்குகின்றார்கள். கோவில் திருவிழாக்களின் போது, ஒலிபெருக்கி சத்தத்தை மிகவும் குறைத்துப் போடுவதன் மூலம் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுத்துதைத் தவிர்க்கலாம்.

“யாழ். மாவட்டத்தில் குற்றச்செயல்கள் சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை உரிய தரப்பினருடன் உதவியுடன் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். சிலர் தலைமறைவாகியுள்ளனர்.

“எனவே, அவர்களை கைதுசெய்ய பொலிஸாருக்கு யாழ். மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப்பெற்றால் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியும்” என்றார்.

வைத்தியசாலையில்

## தனது உயிரை மாய்த்த நோயாளி

■ பைஷல் இஸ்மாயில், துஷாரா

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர், வைத்தியசாலை விடுதி மலசலகூடத்தில் வைத்து நேற்று முன்தினம் (22) இரவு தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

வவுணதீவு, நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சிவலிங்கம் தட்சணாமூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் ஒரு மனநோயாளி என்றும் அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்வதற்காகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதியில் உள்ள நோயாளிகளை வைத்தியர் பார்வையிட்டுச் சென்றதன் பின்னர், குறித்த நபர் மலசலகூடம் சென்றிருந்தார். நெடு நேரமாகியும் அவர் வெளியே வராததையடுத்து, அவருக்கு உதவியாக இருந்த உறவினர் கதவைத் திறந்து போது, தனது உயிரை மாய்த்த நிலையில் அவர் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து நீதிமன்ற உத்தரவை பெற்று, சடலத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பால்மா விநியோகம்

■ நியாஸ் ஆதம்

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கூட்டுறவுச் சங்கங்களின் கோப்பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களின் ஊடாக பால்மாவை விநியோகித்து வருவதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (23) அவர் மேலும் தெரிவிக்கையில், “கூட்டுறவுச் சேவையில் உணவு வழங்கலும் விநியோகமும் அத்தியாவசிய சேவையாக இருப்பதால், அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோக நடவடிக்கையை தொடர்ந்தும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கோப்பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையங்களினூடாக மேற்கொண்டு வருகிறது.

“மத்திய அரசு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை தேசிய கூட்டுறவு சபை ஆகியன இணைந்து மேற்கொண்டுவரும் இவ்வேலைத்திட்டத்தை



கிழக்கில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

“திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை ஆகிய நான்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவுகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கோப்பிறஸ் விற்பனை நிலையத்தின் ஊடாக, 400 கிராம் பால்மா 530 ரூபாய்க்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

“கிழக்கு மாகாணத்துக்கு கிடைக்கப்பெற்ற சுமார் 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான பால்மா, 16 கோப்பிறஸ் விற்பனை நிலையங்களினூடாக அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதியுடன் விற்பனை செய்யப்படுகிறது” என்றார்.

மண் மாபியாக்களால்

## சிறீதரன் எம்.பிக்கு கொலை மிரட்டல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி முரசு மோட்டை பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவரும் மணல் மாபியாக்களால் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது தொடர்பில் வெள்ளிக்கிழைமை (20) கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு 0764482667, 0771966429, 0775538710, 0766774024 ஆகிய நான்கு அலைபேசி இலக்கங்களிலிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

எரிபொருள் பவுசரின் கண்ணாடியை

## சேதமாக்கியவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

■ செந்தூரன் பிரதீபன்

சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சனிக்கிழமை (21) மாலை ஏற்பட்ட அமைதியின்மையையடுத்து, பெற்றோல் ஏற்றி வந்த எரிபொருள் பவுசருக்கு பொதுமக்களால் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து கைதுசெய்யப்பட்ட 27, 29 வயதுடைய இளைஞர்கள் இருவர், நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (22) ஆஜர்படுத்திய போது, நேற்று (23) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு, நேற்று விசாரணைக்கு நடவடிக்கைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர்கள் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.




## படகில் ஹெரோய்ன், ஐஸ் போதைப்பொருள் மீட்பு



■ கனகராசா சரவணன்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தில் படகில் இருந்து 09 கிராம் 210 மில்லிகிராம் ஹெரோய்னும் 01 கிராம் 110 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் (22) மாலை மீட்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையுடன் இணைந்து இராணுவ புலனாய்வு பிரிவினர், வாழைச்சேளை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த றோலர் படகை சோதனையிட்டனர்.

இதன்போது மேற்படி போதைப்பொருட்கள் மீட்கப்பட்டதுடன், அங்கு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிறைச்துறைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞனை கைதுசெய்து, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வருமானம் குறைந்த

## குடும்பங்களுக்கு நிதி ஒதுக்கீடு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்குவதற்கென 2,002 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம். எஸ்.எம் சப்றாஸ், நேற்று (23) தெரிவித்தார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இம்மாதம் முதல் ஜுலை மாதம் வரை மாதாந்தம் 5,000 ரூபாய் நிவாரண கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.



## நினைவஞ்சலி...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா துரைரட்ணசிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு, அன்னாரது குடும்பத்தினரின் ஏற்பாட்டில், திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.



யாழ் – கதிர்காம

## பாத யாத்திரை ஜூன் 4 ஆரம்பம்

■ சகா

யாழ்ப்பாணம் - கதிர்காம பாத யாத்திரை, எதிர்வரும் ஜுன் 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

கதிர்காமம் ஆடிவேல் திருவிழாவை முன்னிட்டு, தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரை வருடாந்தம் நடைபெற்று வந்தது. எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா தாக்கம் காரணமாக பாத யாத்திரை இடம்பெறவில்லை.

எனவே, இந்த வருடம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கதிர்காமம் நோக்கி பாத யாத்திரையில் பயணிக்கவுள்ளனர். அவர்கள் குழுவாகவும் தனியாகவும் பயணிப்பது வழக்கம்.

பிரதான பாதயாத்திரை குழுவான வேல்சாமி தலைமையிலான குழுவினர், எதிர்வரும் ஜுன் மாதம் 04ஆம் திகதி காலை 08 மணிக்கு தொண்டமானாறு செல்வச் சந்நிதியிலிருந்து புறப்படவுள்ளனர்.



## பரீட்சை நிலையத்தில்...

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, நாடாளாவிய ரீதியில் நேற்று (23) ஆரம்பித்துள்ளது. அந்தவகையில், வவுனியா மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கான தயார்படுத்தலில் மாணவிகள் சிலர் ஈடுபட்டுள்ளமையை படத்தில் காணலாம்.
சாதாரண தரப் பரீட்சைக்கு வவுனியாவில் இம்முறை 4,956 மாணவர்கள் தகுதிபெற்றுள்ளதுடன், அவர்களுக்காக 43 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 14 இணைப்பு காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(படம்: க. அகரன்)

## முரண்பாடுகளை பேசித் தீர்ப்போம்

■ லெம்பர்ட்

தமிழ்நாட்டு மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏற்படும் சிறுசிறு முரண்பாடுகளை பெரிதாக்காமல் எங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாக இருக்கிறது என, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் அரிசி, பால் மா, மருந்து பொருட்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். அந்த வகையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலினுக்கும் அனைத்து தமிழக மக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாகவும் எனது கட்சி சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்” என்றார்.



எரிபொருள் வரிசையில் மோதல்

## ஒருவருக்கு கத்திக்குத்து

### அறுவர் கைது

■ எம். செல்வராஜா

பதுளையில் வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு வரிசையில் இருந்தவர்களிடையே ஏற்பட்ட மோதலில், தனியார் பஸ் சாரதியொருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (22) மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 06 பேர், நேற்று (23) காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனியார் பஸ்களுக்கு எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு பஸ்கள் வரிசைகள் நின்ற போது, பின்னாலிருந்த பஸ் ஒன்று முன்னால் சென்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போது, பெரும் அமைதியின்மையும் பதற்றமும் ஏற்பட்டது.

இதனையடுத்து வரிசையிலிருந்த பிறிதொரு தனியார் பஸ் சாரதி, முன்னால் சென்று எரிபொருளைப் பெற முயற்சித்த பஸ் சாரதியை, கத்தியால் குத்திவிட்டு, கத்தியுடன் தமது பஸ்ஸில் தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவரையும் அவருக்கு உதவியவர்களையும் கைது செய்யுமாறு, எரிபொருளைப் பெற வந்தவர்கள், பதுளை பிரதான வீதியை வழி மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதுவரை கத்திக் குத்துக்கு இலக்கானவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதையும் போராட்டக்காரர்கள் தடுத்திருந்த நிலையில், இரத்த வெள்ளத்தில் கிடந்த தனியார் பஸ் சாரதியை, பதுளைப் பொலிஸார் தலையிட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

முதுகெலும்பற்ற

# எம்.பிக்களை மக்கள் வெறுக்கின்றனர்

### மலையக மக்களின் இன்றைய அவலம்

■ எம்.பிரபா

நாட்டின் இன்றைய நிலைக்கு காரணமான, ஜனாதிபதி, பிரதமருக்கு மற்றும் அவர்களுக்கு இசைபாடிய 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கின்றனர் எனத் தெரிவித்த ஹட்டன் சர்வமத ஒன்றியத் தலைவர்கள், மலையக மக்களின் இன்றைய அவல நிலைக்கு மலையகத்தில் இருக்கும் முதுகெலும்பு இல்லாத அரசியல்வாதிகளே முற்று முழுதான காரணம் என்றனர்.

கரித்தாஸ் கண்டி செட்டிக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.




தொடர்ந்து தெரிவித்த அவர்கள், இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இந்தக் குழப்ப நிலை காரணமாக, மலையக மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த மக்கள் ஒரு வேளை உணவுக்கும் தடுமாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

மலையக அரசியல்வாதிகள், தமது கட்சி சார்ந்த சுயநல அரசியலை முன்னெடுத்ததால்தான் 200 வருடங்களாக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுத்தும் எமது மக்கள் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, மலையக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாமும் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத் தர கடமைப்பட்டுள்ளோம் என்றும் சர்வமத தலைவர்கள் தெரிவித்தனர்.

பூம் இயந்திரம் விபத்து

## ஒருவர் பலி; மூவர் காயம்

■ பி.கேதீஸ்



வெட்டிய மரங்களை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் லொறி (பூம் இயந்திரம்) ஒன்று, ரதெல்ல -வங்கிஓயா கீழ் பிரிவு தோட்ட வீதியில், வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து நேற்று (23) காலை விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகி, நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என, நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் உயிரிழந்தவர் யாரென இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ரதெல்ல தோட்டத்தில் வெட்டிய மரங்களை ஏற்றுவதற்காக, வங்கிஓயா கீழ்பிரிவு தோட்டத்திலிருந்து ரதல்ல நோக்கி நேற்று (23) காலை சென்று கொண்டிருந்த போதே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## எதிர்ப்பு...

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுபாட்டை நிவர்த்திக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி, நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையின் தாதியர் உள்ளிட்ட பணி குழாமால் நேற்று (23) எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்: ரஞ்சித் ராஜபக்ஷ)





கேகாலையில் நூதன வியாபாரம்:

## வாடகைக்கு விடப்படும் எரிபொருள் தாங்கிகள்

■ என்.ஆராச்சி

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையில், கேகாலை நகரை அண்மித்த பகுதிகளில் ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் எரிபொருள் தாங்கிகளை வாடகைக்கு விடும் வியாபாரம் முன்னெடுக்கப்படுவதாக தெரியவருகின்றது.



எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் கேன்களில் எரிபொருள் வழங்கப்படாது என தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கி 200 ரூபாய்க்கும் ஓட்டோவின் தாங்கி 300 ரூபாய்க்கும் வழங்கப்படுகின்றது.

எரிபொருள் நிரப்பப்பட்டதும் வெற்றுத் தாங்கி வாடகைப் பணத்துடன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கேகாலை நகரிலிருந்து சற்று தொலைவிலுள்ள கிராமங்களில் பெற்றோல் 1 லீற்றர் 600 தொடக்கம் 800 ரூபாய் வரை விற்பனை செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஹட்டனில்

## முட்டையின் விலை அதிகரிப்பு

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் கோழி இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலை மேலும் அதிகரித்துள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, ஹட்டனில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1,100 ரூபாய் தொடக்கம் 1,250 ரூபாய் வரை விற்கப்படும் அதேவேளை, சிவப்பு முட்டை 37- 39 ரூபாய்க்கும் வெள்ளை முட்டை 34- 36 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டை சார் உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.



பொருட்களின் விலையேற்றம்

## பெருந்தோட்ட மக்களை அதிகம் பாதித்துள்ளது

■ செ.தி.பெருமாள்



அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு பெருந்தோட்ட மக்களை அதிகம் பாதித்துள்ளது எனத் தெரிவித்த செங்கொடி சங்கத்தின் தலைவர் செல்லையா சிவசுந்தரம், இதனை சமாளிக்க முடியாமல் தொழிலாளர்கள் தவிக்கும் நிலை தோன்றியுள்ளது என்றார்.

நேற்று (23) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பொருளாதார சுமையை மக்களால் சுமக்க முடியாமல் தவிக்கும் நிலை தோன்றியுள்ளதாலேயே, மக்கள் போராட்டம் நடத்துகிறார்கள்.

இருந்த போதும் இன்றைய அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நாட்டின் அதிகளவில் அந்நிய செலாவணியைப் பெற்று கொடுக்கும் தொழிலாளர்களுக்கு, கடந்த சில வருடங்களாக முறையாக பணி வழங்குவதில்லை என்பதுடன், நியாயமான ஊதியம் வழங்கப் படுவதும் இல்லை.

அத்துடன், பெருந்தோட்ட தொழிலாளர்கள் தங்களின் நாளாந்த உணவில் கோதுமை மாவை அதிகளவில் பயன்படுத்தும் நிலையில், மீண்டும் கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை மேலும் தொழிலாளர்களை பாதிக்கச் செய்துள்ளது என்றார்.

தமிழக நிவாரணங்கள்

## உரியவர்களை சென்றடைய வேண்டும்

■ நீலமேகம் பிரசாந்த்

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள், எவ்வித பாரபட்சங்களும் இல்லாமல் தேவையானவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் சச்சுதானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“இலங்கையில் பொருளாதார நெருக்கடி மிகத் தீவிர நிலையை எட்டியுள்ளதுடன், மக்களும் அன்றாடம் பொருட்களை வாங்க வரிசையில் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தமிழக முதலமைச்சர், இலங்கை மக்களுக்கு அனுப்பியுள்ள இந்த நிவாரணம் பேருதவியாக காணப்படுகின்றது.



“இருப்பினும், வழங்கப்பட்டுள்ள இந்நிவாரணம் எவ்வித பாகுபாடும் இன்றி தேவையானோருக்கு நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக அன்றாட கூலித்தொழில் செய்து வாழ்க்கை நடத்துபவர்கள், இக்காலத்தில் முழுமையாக வருமானத்தை இழந்தவர்கள், மிக வறுமையின் பிடியில் காணப்படுவர்களைத் தெரிவு செய்து இந்நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

மேலும், இந்தியா நமது தொப்புள்கொடி நாடு; எம்மை ஒருபோதும் கைவிடாது என்ற மன ஆறுதலை தமிழக முதலமைச்சர் கொடுத்துள்ளார். தக்க நேரத்தில் இந்நிவாரணம் கிடைத்துள்ளமைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக நன்றி தெரிவிப்பதாகவும் உபதலைவர் சச்சுதானந்தன் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் கோரி

## ஹட்டன்– நுவரெலியா வீதியில் மறியல்

■ எஸ்.கணேசன்

தமக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடியாக மண்ணெண்ணெய் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் கொட்டகலை எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக, மக்கள் நேற்று (23) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியை மறித்து முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தால் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக கடந்த மூன்று நாள்களாகவே, கொட்டகலை நகரிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு மக்கள் வருகின்றனர். எனினும், மண்ணெண்ணெய் இல்லை எனக் கூறி மக்கள் திருப்பி அனுப்படுகின்றனர். இந்நிலையிலேயே மக்கள் வீதி மறியல் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த திம்புள்ளபத்தன பொலிஸார், மக்களுக்கு நிலைமையை எடுத்துரைத்து, அவர்களை கலைந்துசெல்லுமாறு கோரினர். இதையடுத்து மக்களும் அங்கிருந்து சென்றனர். போக்குவரத்தும் வழமைக்குத் திரும்பியது.

எனினும், மண்ணெண்ணெய் வைத்துக்கொண்டுதான், இப்படி அநீதி செய்கின்றனர். தற்போதைய அரசும் மக்களை வதைக்கின்றது. இப்படியான அரசு தேவையில்லை என மக்கள் தமது உள்ளக்குமுறல்களை இதன்போது வெளிப்படுத்தினர்.

# பிஞ்சு உயிர்களைக் குடிக்கும் பெட்ரோலும் மிதமிஞ்சிய பதுக்கலும்

பூமியில் பிறக்கும் போது எதையும் கொண்டுவரவில்லை; இறந்த பின்னரும் எதையும் கொண்டு போவதும் இல்லை. இப்படியெல்லாம் தத்துவம் கூறும் பலரிடம் நேர்மை, நியாயம் இருக்காது என்பதை, பலரும் கண்டிருப்பீர்கள். மற்றையோர் எக்கேடுகெட்டுப் போனாலும் பரவாயில்லை; நாங்கள் அள்ளிக்கொள்ள வேண்டுமென்ற நினைப்பில் மட்டுமே இருப்பர்.

இவ்வாறான சுயநல சிந்தனைகளால், கிடைக்காதவர்களுக்கு கிடைக்காமலே போய்விடும். இருப்பவர்கள், தேவைக்கு மிஞ்சி பதுக்கிக்கொள்கின்றனர். இன்னும் சிலர், பதுக்கியவற்றை கொள்ளை இலாபத்துக்கு விற்று விடுகின்றனர். கேட்டால், 'கைமாற்றல்' எனப் புது அர்த்தம் கற்பிப்பர்.

தட்டுப்பாடுகள் நிலவுவது சாதாரணமானது. எனினும், வேண்டுமென்றே தட்டுப்பாட்டை ஏற்படுத்தினால், அது பதுக்கலாகும். பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என்றோர் எதிர்வுகூறல் விடுக்கப்படுமாயின், சந்தைகளில் அந்தப்பொருளை மருந்துக்கேனும் காணக்கிடைக்காது. விலை அதிகரிக்கப்பட்டதன் பின்னர், அப்பொருளைத் தட்டுப்பாடின்றி கொள்வனவு செய்யக்கூடியதாய் இருக்கும்.

நாடளாவிய ரீதியில், வரிசைகள் குறையவில்லை. தங்களுடைய தேவைக்கு அதிகமாகவே பலரும் கொள்வனவு செய்துகொள்கின்றனர். வரிசையில் நின்றிருந்த போது, மயங்கிவிழுந்து மரணித்தோரின் எண்ணிக்கை கூடிவிட்டது. அதேபோல, எரிபொருள் இன்மையால், அவசரமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமையால், இரண்டு உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியாவில் வயிற்று வலியால் துடித்துக்கொண்டிருந்த ஒன்பது வயதான சிறுவனை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கு, வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடியாமையால், அச்சிறுவன் மரணித்துள்ளான்.

ஹல்துமுல்லையில் பிறந்த இரண்டே நாளான சிசு, திடீரென நோய்வாய்ப்பட்டுள்ளது. அந்தச் சிசுவை வைத்தியசாலைக்கு உரிய நேரத்தில் எடுத்துச்செல்வதற்கு வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடியாமையால் அக்குழந்தையும் மரணித்துவிட்டது. இவ்வாறான மரணங்கள் இனிமேலும் இடம்பெறாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை.

போஷாக்கான உணவு இன்மையால் நோயெதிர்ப்பு சக்தி உடலில் குறைந்து வருவதால், அடிக்கொரு தடவை குழந்தைகளும் சிறுவர்களும் நோய்வாய்ப்பட்டு விடுகின்றனர். மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆகையால், தங்களுக்குத் தேவையான அளவை மட்டுமே கொள்வனவு செய்துகொண்டு, ஏனையோருக்கும் கொஞ்சமேனும் விட்டுக்கொடுத்தால், இருப்பவர்கள் மட்டுமன்றி, இல்லாதவர்களும் ஓரளவுக்கு நிம்மதியாக வாழமுடியும்.

ஓரளவுக்குத் தேவையான அளவு எரிபொருள் வந்துகொண்டுதான் இருக்கின்றது. அதனை விநியோகிப்பது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைச் சிக்கல்களால், பற்றாக்குறை ஏற்பட்டு விடுகின்றது. அவற்றை நிவர்த்தி செய்துகொள்ளும் வரையிலாவது, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது சிறந்ததாகும்.

கிடைப்பதையெல்லாம் ஒருசிலர் மட்டுமே அள்ளிக்கொண்டு போய்விட்டால், ஒன்றுமே கிடைக்காமல் நிகழும் மரணங்கள் குறையாது. வரிசைகள் நீளும் போதெல்லாம் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லையென்பதை நினைவில் கொள்க!


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எதிரிகளாக நோக்கியவர்களை, காலப்போக்கில் வேண்டப்பட்டவர்களாக ஏற்றுக்கொண்டீர்களா? அல்லது, தொடர்ந்தும் அவர்களை எதிரிகளாகவே எண்ணுகின்றீர்களா?

எந்தநிலையிலும் மாற்றம் ஏற்படலாம். கோபம் கூட தற்காலிகமானதுதான். இயல்பாகவே சராசரி மனிதர்களின் சிந்தை இரங்கும் தன்மை கொண்டது. மாறாத சினம் மனதில் வடுவாகி, வலிகளை ஏற்படுத்தியபடியே இருக்கும்.

பகையுடன் வாழும் ஒருவரும் நிம்மதியாக இருப்பதில்லை. வாழும் காலத்தில், நிம்மதியாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும். மக்கள் கூட்டத்தில் நாங்களும் ஒருவர். உறவுகளுடன் முரண்படுவது அநாகரிகமானது.

எமக்கு யார், எவர் எனத் தெரியாதவர் கூட, சில சமயங்களில் எமக்கு அளப்பரிய உதவிகளைச் செய்துவிடுகிறார். எதையும் எதிர்பாராத மக்களுடன் வாழும் உங்களுக்கு, அது சந்தோஷமூட்டும் தருணங்கள் அல்லவா! விலகுவதைவிட இணைதல் நல்லது. நல்ல மனிதர்கள் யார் என அறிவதே விவேகமானது. ஒதுக்குவதில் ஏது பெருமை? இது வீணான ஆணவம். நட்பு வட்டாரத்தை விரிவுபடுத்த எண்ணும்போது, நல்லோரைத் தெரிவுசெய்க.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காரைநகர் – ஊர்காவற்றுறை

## பாதை சேவை தடைப்பட்டுள்ளது

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதை படகு, ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடாமையால் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

மண்ணெண்ணெய் இல்லாமையாலேயே சேவை இடம்பெறவில்லை என, வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்து உள்ளது. இப்பாதை சேவையை நடத்துவதில், வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது என இந்தப் பாதையில் தினமும் பயணிப்போர் குற்றம் சாட்டுகின்றனர்.

பொறுப்புடைய ஓர் அரச நிறுவனம், மண்ணெண்ணெயை தேவைக்கேற்ப பெற்று வைத்திருந்து, மக்களுக்கு சீரான சேவையை வழங்கவேண்டும். அதை விடுத்து, கடல் கடந்து போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களை சிரமத்துக்கு உள்ளாக்குகின்றமை குறித்து, பாதிக்கப்பட்ட மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். பாதை சேவை இடம்பெறாமையால் படகுகளில் மோட்டார் சைக்கிள்களை ஏற்றும்போது அவை சேதமடைகின்றன எனவும் உதிரிப்பாகங்களை அதிக விலைக்கு பெற்று சீர்செய்தாலும், அவை மீண்டும் சேதமடைகின்றன எனவும் கவலை வெளியிடுகின்றனர்.

இந்த விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் கவனம் எடுத்து, பாதை சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

என். பொன்ராசா

### அந்த முஸ்லிம் எம்.பிக்கள்:

# வீட்டுக்குப் போவது நல்லது

மொஹமட் பாதுஷா

இதுவரை காலமும் ஆட்சி செய்த எல்லோரும் சேர்ந்துதான், இந்தத் தவறான ஒற்றையடிப் பாதையில், நாட்டை மெல்ல மெல்ல நகர்த்தி வந்து, இருள் சூழ்ந்த இடத்தில் நிறுத்தியுள்ளார்கள்.

இந்த நிலைமைக்கு, இன்றைய ஜனாதிபதியோ மஹிந்த உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பமோ, மட்டுமே காரணமல்ல. மாறாக, முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி, அமைச்சர்கள், எம்.பிக்களும்தான் காரணம் என்பதை மறந்து விடக்கூடாது.

அப்படியென்றால், இவர்களுக்கு வாக்களித்த ஒவ்வொரு பொதுமகனுக்கும் இந்த நெருக்கடியான நிலைமைக்கு வர மறைமுக பங்கிருக்கின்றது. ஆகவேதான், ராஜபக்ஷவினர் அதிக தவறிழைத்து இருக்கின்றார்கள் என்பதற்காக, அவர்கள் மீது எல்லாப் பழியையும் போட்டு விட்டு, பொறுப்புக்கூறலில் இருந்து யாரும் தப்பியோடிவிட முடியாது.

இந்நிலையில், தோல்வியடைந்த ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் இலங்கையின் செயற்பாட்டு அரசியலை விட்டு வெளியேறி, 'வீடு செல்ல வேண்டும்' என்பதே மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. அதன் ஆரம்பப் புள்ளியாக, கோட்டாவை வீட்டுக்குச் செல்லக் கோரும் கோசங்களைக் கருதலாம்.

இலங்கையை ஆட்சி செய்த எல்லோருக்கும் இதில் பொறுப்பிருக்கின்றது என்றால், ரணில் விக்கிரமசிங்கவும் அதில் ஒருவர். இன்று நாட்டை தூக்கி நிமிர்த்துவதற்காக அவர் பிரதமர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார். அதாவது, நெருக்கடிகளுக்கு எல்லாம் பிரதான காரணமான ராஜபக்ஷவினர், இதற்கு இன்னுமொரு காரணமான ரணிலை பலிக்கடாவாக்கி உள்ளனர்.

பிரதமராக ரணில் பதவியேற்ற பிறகு, நாட்டு மக்களிடையே சிறிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. ஆனாலும் அது, 'அவர் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பார்' என்கின்ற அளவுக்கான அபார நம்பிக்கையல்ல! ஏனெனில் அவரது 'நல்லது', 'கெட்டது'களை, நாடு நன்றாக அறியும்.

ரணிலின் வருகையின் பின்னர், சில சிறிய மாறுதல்கள் ஏற்படுவதான தோற்றப்பாடு உருவாகியுள்ளது. பொருளாதார விடயங்களில் இதைவிடப் பெரிய முன்னேற்றங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால், இலங்கையில் 'அரசியல் முறைமை மாற்றம்' ஏற்படாது. அவ்வாறே, மக்கள் எதிர்பார்க்கின்ற காரியங்களையும் அவரால் செய்ய முடியாது போகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், மத்திய வங்கி பிணைமுறி மோசடி, ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான நிதி மோசடி குற்றச்சாட்டுகள், வாபஸ் பெறப்பட்ட வழக்குகள் எனப் பல விவகாரங்களில் பிரதமர் ரணில் நழுவல் போக்கையே கடைப்பிடிப்பார்.

புதிய பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது, கோட்டாபய ராஜபக்ஷ இன்னும் ஜனாதிபதியாக இருக்கின்றமையும் ராஜபக்ஷர்களால் ஆட்டுவிக்கப்படும் பொம்மையாக, புதிய பிரதமர் நோக்கப்படுகின்றமையும் ஆகும்.

இரண்டாவது, மக்களின் எதிர்பார்ப்பான கட்டமைப்பு மாற்றமொன்றை நிகழ்த்துவதற்கு இவர் பொருத்தமற்றவர் என்பதும், இவரது நியமனத்துக்குப் பின்னாலுள்ள அரசியல் மர்மங்களும் எனலாம்.

இந்தப் பின்னணியில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒருவித மௌன விரதத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். இன்றைய அரசியல் சூழலில், தம்முடைய நிலைப்பாடு என்ன? தாம் யாருக்கு ஆதரவளிக்கப் போகின்றோம் என்பதை அவர்கள் இன்னும் வெளிப்படையாக மக்களுக்கு அறிவிக்கவில்லை.

இது அவர்களது வழக்கமான பாணிதான்! அதாவது, தமக்கு சிக்கலான, மக்களது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத தருணங்களில், பொதுவெளியில் இருந்து ஓடி ஒளிந்து கொள்வதை, நீண்டகாலமாகவே முஸ்லிம் சமூகம் அவதானித்து வருகின்றது.

மக்கள் சார்ந்த அரசியலில் தோல்வி கண்ட மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும், வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்த வரிசையில் முதலில் நிற்பவர்கள் முஸ்லிம் எம்.பிக்கள்தான். ஏனெனில், ராஜபக்ஷர்களின் தோல்வி அல்லது ரணில், மைத்திரி போன்றோரின் தோல்வி என்பது, ஐந்து, 10 வருடங்களுக்குள் நிகழ்ந்ததுதான்.

ஆனால், முஸ்லிம் தலைவர்களும் முன்னாள், இந்நாள் எம்.பிக்களும் மக்களுக்கான அரசியலைச் செய்வதில் தொடர்ச்சியாக 25 வருடங்கள் தோல்வி கண்டிருக்கின்றனர். எனவே, 'வீட்டுக்கு அனுப்ப வேண்டும்' என்றால் முதல் தெரிவு, முஸ்லிம் அரசியல்வாதிகளாகத்தான் இருப்பார்கள்.

மஹிந்த, மைத்திரி, ரணில், கோட்டாபய உள்ளடங்கலாக அதற்கு முன்னர் ஆட்சிப்பீடத்தில் இருந்த ஆட்சியாளர்களுக்கோ அல்லது சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பெருந்தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கோ முட்டுக் கொடுக்கின்ற வேலையை மட்டும்தான், முஸ்லிம் கட்சிகளும் எம்.பிக்களும் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ச்சியாகச் செய்து கொண்டு வருகின்றார்கள்.

இணக்க அரசியலே முஸ்லிம்களுக்குப் பொருத்தமானது என்பதை மறுக்கவில்லை. ஆனால், இந்த இணக்க அரசியலின் ஊடாக, முஸ்லிம் சமூகத்துக்கு எதைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்கள்?

அவர்கள் தலைவர்களாகி இருக்கின்றார்கள். நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றிருக்கின்றார்கள். அமைச்சர்களாக பதவி வகித்துள்ளார்கள். அதனூடாக தீர்வை விலைக்கு வாகனங்கள் உள்ளடங்கலாக, பல வெகுமதிகளை அனுபவித்துள்ளார்கள். சொத்துச் சேர்த்துள்ளார்கள். தரகுப் பணம் எனப் பலவற்றின் மூலம் வங்கிக் கணக்குகளை நிரப்பியுள்ளார்கள். ஆனால், இதுவெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் 'கணக்கில்' வராது!

முஸ்லிம் எம்.பிக்கள் இதுவரை காலமும் தமது சமூகத்துக்காக எதைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள் என்று பார்த்தால், எல்லாம் வெற்றிடமாகவே தெரிகின்றது. எனவேதான், ஆட்சியாளர்கள் தோல்வியடைவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே, முஸ்லிம் அரசியல் தோல்விகண்டு விட்டது.

முஸ்லிம்களுக்கு எதிராகப் பல நகர்வுகள் இடம்பெற்ற காலத்தில், ஏதாவது ஒரு முஸ்லிம் அணி, ஆளும்தரப்புக்கு ஆதரவளித்துக் கொண்டே இருந்தது. அரசமைப்பின் 17, 18, 20 ஆகிய திருத்தங்களுக்கு சார்பாக வாக்களித்தனர். சிலர் 19இற்கு எதிராக நின்றனர். இதுதவிர, சமூகத்துக்குப் பாதகமான மேலும் பல நகர்வுகளுக்கு, நக்குண்டு நாவிழந்து துணை போயினர்.

அதன் உச்சமாக, மாற்றம் வேண்டும் என்று நாடே போராடிக் கொண்டும், மொட்டு கட்சிக்காரர்களே பதவி வேண்டாம் என்று கூறிக் கொண்டும் இருந்த காலத்தில் கூட, இரு முஸ்லிம் எம்.பிக்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். இதனால் அவர்களுக்கு என்ன கிடைத்ததோ, ஆயினும் சமூகத்துக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

இப்போது ஏனைய சமூகங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளைப் போலவே முஸ்லிம் எம்.பிக்களுக்கும் மூன்று தெரிவுகள் இருக்கின்றன.

முதலாவது, கோட்டாபய ராஜபக்ஷவையும் வீட்டுக்கு அனுப்பி, முற்றுமுழுதாக ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்த முடியுமென்றால் அதற்காக வேலை செய்தல். ஆனால், இப்போதைக்கு இது இலகுவான காரியமல்ல.

இரண்டாவது, பிரதமர் ரணிலை எதிர்ப்பதன் மூலம், இந்த இடைக்கால ஆட்சியை தோல்வி காணச் செய்வது.

மூன்றாவது, நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக குறுகிய காலத்துக்காவது ரணில் விக்கிரமசிங்கவின் நல்ல நகர்வுகளுக்கு ஆதரவளித்தல்.

இவைதவிர, முஸ்லிம் எம்.பிக்களுக்கு விசேடமாக இன்னுமொரு தெரிவு இருக்கின்றது. முஸ்லிம் சமூகம்சார் அரசியலில் தோல்வி கண்டு விட்டோம் என்று அவர்களாகவே உணர்ந்து கொண்டு, அரசியலை விட்டு விலகி வீட்டுக்குச் செல்வதாகும். இது மிக இலகுவாக தெரிவாகும்.

நாட்டு மக்கள் இன்று எதிர்கொண்டுள்ள நெருக்கடியைச் சீர்படுத்துவதற்கு எல்லோரும் முன்னிற்க வேண்டும். அதாவது, ஓர் அடிப்படையில் மக்களை இந்தப் படுகுழியில் இருந்து மீட்க, எல்லா அரசியல்வாதிகளும் முன்னிற்க வேண்டும். இந்தப் பொறுப்பு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் உள்ளது.

இப்போது இவ்வளவும் நடந்து விட்ட பிறகும் கூட, பிரதான இரு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் ஏனைய அநேக முஸ்லிம் எம்.பிக்களும் 'மதில்மேல் பூனை'களாகவே இருக்கின்றனர். இன்னும் மக்களின் பக்கத்துக்கு அவர்கள் வரவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

இது இக்கட்டான காலம். மக்களுக்கு எல்லா வகையிலும் வழிகாட்டல்கள் அவசியமான தருணம் என்ற வகையில், 'இரண்டும் கெட்டான் நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்து, ஏதாவது ஓர் உருப்படியான முடிவை முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் எடுக்க வேண்டும்.

அவ்வாறில்லாவிடின், இப்படியான ஒரு சூழலில் கூட, சமூகத்துக்காக எதையும் செய்யத் தகுதியில்லாத அந்த அரசியல்வாதிகள், அரசியலை விட்டு வெளியேறி, வீட்டுக்குப் போவது மேலானது.

# மீண்டும் கிராமத்து பெண்ணாக அதிதி ஷங்கர்?



பிரமாண்ட இயக்குநர் ஷங்கரின் இரண்டாவது மகள் அதிதிஷங்கர், கார்த்தி நடித்த 'விருமன்' என்ற திரைப்படத்தில் நாயகியாக கிராமத்து பெண் கேரக்டரில் நடித்துள்ளார். இந்த திரைப்படம் ஒகஸ்ட் 31 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

இந்த நிலையில் சிம்பு நடிக்க உள்ள 'கொரோனா குமார்' என்ற திரைப்படத்தில் நாயகியாக அதிதிஷங்கர் நடிக்க இருப்பதாக ஏற்கெனவே செய்தி வெளியான நிலையில், தற்போது ரொமான்ஸ் திரைப்படங்களை இயக்குவதில் வல்லவரான கௌதம் மேனனின் அடுத்தத் திரைப்படத்தில் அதிதிஷங்கர் நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.



மலையாளத்தில் வெளியான 'கப்பேலா' என்ற திரைப்படத்தின் தமிழ் ரீமேக் திரைப்படத்தை கௌதம் மேனன் இயக்க இருப்பதாகவும் இந்தத் திரைப்படத்திலும் அதிதிஷங்கர் நாயகியாக நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தின் நாயகி பாத்திரம் கிராமத்து பெண் என்ற நிலையில் மீண்டும் அதிதிஷங்கர் கிராமத்து பெண்ணாக நடிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

# தமிழில் தவறவிட்டு தெலுங்கில் வெற்றி



கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய பிக் பாஸ் முதல் சீசனில் போட்டியாளர்களாக கலந்து கொண்ட நடிகை பிந்துமாதவி, அந்த சீசனில் நான்காவது இடத்தை பிடித்தார்.

இந்த நிலையில் தெலுங்கு பிக்பாஸ் போட்டியில் பங்கேற்ற பிந்துமாதவி டைட்டில் வின்னர் பட்டத்தை வென்றார். அவருக்கு ஐம்பது இலட்ச இந்திய ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ் பிக் பாஸ் நிகழ்ச்சியில் டைட்டிலை தவறவிட்ட பிந்து மாதவி தெலுங்கு பிக்பாஸ் நான்ஸ்டாப் நிகழ்ச்சியில் டைட்டில் பெற்றதை அடுத்து அவருக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்

தமிழில் 'வெப்பம்' என்ற திரைப்படத்தில் அறிமுகமான பிந்து மாதவி அதன்பின் 'கழுகு' 'கேடி பில்லா கில்லாடி ரங்கா' 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' உள்பட பலத் திரைப்படங்களில் நடித்தார். தற்போதும் அவர் மூன்று திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

# உறுதியானது 'டிமான்டி காலனி 2'

2015ஆம் ஆண்டு அஜய் ஞானமுத்து இயக்கத்தில் வெளியான திரைப்படம் டிமான்ட்டி காலனி. அருள்நிதி, ரமேஷ் திலக், சனத் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

மு.க.தமிழரசு தயாரிப்பில் உருவான




இந்தத் திரைப்படத்தினை தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் வெளியிட்டது.




# விக்ரம், சமந்தாவுடன் விஷால் மோதல்

நடிகர் விக்ரம் மற்றும் நடிகை சமந்தா ஆகியோர்களின் திரைப்படங்கள் வெளியாகும் தினத்தில் தனது திரைப்படத்தை ரிலீஸ் செய்ய இருப்பதாக விஷால் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளமையானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விஷால் நடிப்பில் உருவான 'லத்தி' திரைப்படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில் தற்போது இந்தப் படத்தின் போஸ்ட் புரடொக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் இந்தத் திரைப்படத்தின் ரிலீஸ் திகதி ஒகஸ்ட் 12 என விஷால் தனது சமூக வலைத்தளத்தில் அறிவித்துள்ளார். இதனை அடுத்து இந்தத் திரைப்படத்தின் புரமோஷன் பணிகள் விரைவில் தொடங்க உள்ளது.


இந்த நிலையில் ஒகஸ்ட் 11ஆம் திகதி விக்ரம் நடித்த 'கோப்ரா' திரைப்படமும் ஒகஸ்ட் 12ஆம் திகதி சமந்தா நடித்த நான்கு மொழி திரைப்படமான 'யசோதா' திரைப்படமும் வெளியாக உள்ளது. இதனையடுத்து விக்ரம் மற்றும் சமந்தாவுடன் மோத, விஷால் தயாராகிவிட்டார் என்கின்றனர் கோலிவுட் தரப்பினர்.

# மீண்டும் 'கில்லி' கூட்டணி

தெலுங்கு இயக்குநர் வம்ஷி படைப்பள்ளி இயக்கத்தில் நடிகர் விஜய், தனது 66ஆவது திரைப்படத்தில் நடிக்கிறார். கதாநாயகியாக நடிக்க ராஷ்மிகா மந்தனா இணைந்துள்ளார்.

தமன் இசையில் இந்தத் திரைப்படத்தின் பாடல்கள் உருவாகி வருகிறன. தில் ராஜூவின் வெங்கடேஸ்வரா நிறுவனம் தயாரிக்கும் இந்தத் திரைப்படத்தின் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

முதற்கட்ட படப்பிடிப்பு பூஜையுடன் கடந்த மாதம்



தொடங்கியது. இதில் ஒரு பாடல் காட்சி மட்டும் படமாக்கப்பட்டது. இதையடுத்து இரண்டாம் கட்ட படப்பிடிப்பு கடந்த சில நாள்களுக்கு முன்பு ஐதராபாத்தில் தொடங்கியது.

இதில் நடிகர் விஜய் கலந்து கொண்டு நடித்து வருகிறார். இந்தப் படப்பிடிப்பு சில முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் படப்பிடிப்பில் விஜய்யுடன் நடிக்க பிரகாஷ் ராஜ் இணைந்துள்ளார். இதையொட்டி விஜய்யுடன் பிரகாஷ் ராஜ் இருக்கும் புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. 'கில்லி' திரைப்படத்தின் சூப்பர் ஹிட் வெற்றிக்கு பிறகு மீண்டும் விஜய்யுடன் பிரகாஷ் ராஜ் நடிப்பது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல்

# பிளாஸ்டிக் கழிவுகளில் பெட்ரோல் தயாரிப்பு

## பழனி மாணவனின் அசாத்திய கண்டுபிடிப்பு

பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து பெட்ரோல் தயாரிக்கும் முயற்சியில் பழனியைச் சேர்ந்த கல்லூரி மாணவன் கார்த்திக் பழனி வெற்றி பெற்றுள்ளார்.

வேதியியல் பிரிவில் முதுகலை இறுதி ஆண்டு படித்து வரும் இவர், கடந்த 2 ஆண்டுகளாக பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து வாகன எரிபொருள் தயாரிக்கும் ஆய்வில் ஈடுபட்டு வந்தார். இந்த முயற்சியில் அவர் தற்போது வெற்றி அடைந்துள்ளார்.

ஒரு கிலோ கிராம் அளவிலான பிளாஸ்டிக் கவர்களை எரிப்பதன் மூலம், 300 மில்லி லீற்றர் பைராலிஸிஸ் பெட்ரோல் கிடைப்பதாகவும் இதில் 10 சதவீதம் அப்ஸலுட்டில்லி ஆல்காஹாலை சேர்த்தால் வாகன எரிபொருளாக பயன்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார். ஒரு லிற்றருக்கு 58 கிலோ மீற்றர் வரை வாகனம்



இயங்கும் என்றும் இயந்திரத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதன் மூலம் வரும் எரிவாயுவை சமையலுக்கும் பிளாஸ்டிக் குப்பைகளை எரித்து அதன் மூலம் இறுதியாக கிடைக்கும் கழிவுகளை சாலை அமைப்பதற்கும் கொன்க்ரீட் போடுவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கார்த்திக் தெரிவித்தார்.பிளாஸ்டிக் கவர் கழிவுகளில் இருந்து எடுக்கும் பெட்ரோல் மூலம் மாணவன், தனது இரு சக்கர வாகனத்தை இயக்குவது அப்பகுதியினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ராய்ச்சூர்

# ஆறு நாள் சிசுவுடன் பரீட்சை எழுதிய பட்டதாரி

பிறந்து 6 நாள்களான கைக்குழந்தையுடன் பெண்ணொருவர் ஆசிரியர் தகுதி பரீட்சை எழுத்திய சம்பவம் கர்நாடக மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

கர்நாடக மாநிலம் முழுவதுமுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் நிலை பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான பரீட்சை, கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்றது.

ராய்ச்சூர் நகரிலுள்ள மகளிர் கல்லூரியில் பரீட்சை மத்திய நிலையத்துக்கு பரீட்சை எழுத வந்த பட்டதாரி பெண்ணொருவர், பிறந்து ஆறு நாள்களேயான, கைக் குழந்தையை வைத்திருந்தார். அவரை பார்த்த பரீட்சை மத்திய நிலை கண்காணிப்பாளர்கள், ஏனைய பரீட்சார்த்திகள் ஆச்சரியம் அடைந்தனர். அந்தப் பெண்ணின் முயற்சியையும் பாராட்டினர்.

புதுடெல்லி

# போபால் ஜாமியா மசூதிக்கும் சிக்கல்

## கோவிலை இடித்துக் கட்டியதாக இந்துத்துவா அமைப்புகள் புகார்

மத்திய பிரதேசத்தின் தலைநகரான போபாலில் உள்ள ஜாமியா மசூதி, சிவன் கோவிலை இடித்தே கட்டப்பட்டதாக குற்றஞ்சாட்டும் இந்து அமைப்புகள், நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் திட்டமிட்டுள்ளன.

உத்தர பிரதேசத்தின் அயோத்தியில் 2019 இல் ராமர் கோவில் பிரச்சினை முடிவுக்கு வந்தது. இதன் மேன்முறையீட்டு மனுவில் இந்துதரப்பினருக்கு கோவில் கட்ட அனுமதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பின்போது, மத்திய அரசின் வழிபாட்டுத்தலங்கள் பாதுகாப்பு சட்டம் 1991இன்படி, இதர வரலாற்றுக்காலப் புனிதத் தலங்கள் உள்ள நிலையிலேயே எந்த மாற்றம் இன்றி தொடரும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், வாரணாசி காசிவிஸ்வநாதர் கோவில் அருகிலுள்ள கியான்வாபி மசூதி, கோவிலை இடித்துக்




கட்டப்பட்டுள்ளது என்று சர்ச்சை எழுந்துள்ளது. இதுதொடர்பாக நீதிமன்ற உத்தரவின்படி கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மதுராவின் ஷாயி ஈத்கா உள்ளிட்டப் பல மசூதிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மத்திய பிரதேசத்தின் போபாலிலுள்ள, ஜாமியா மசூதிக்கு சிக்கல் உருவாகி விட்டது. இது 19ஆம் நூற்றாண்டில் போபாலின் முதல் பெண் நவாபான குத்துஸியா பேகம் என்பவரால், 1832முதல் 1857ஆம் ஆண்டுக்கு இடையே கட்டப்பட்டது. அப்போது, அங்கிருந்த சிவன் கோவிலை இடித்து கட்டியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவை

# பஞ்சு விலை உயர்வால்

## நூற்பாலைகள் பாதிப்பு



அபரிமிதமான பஞ்சு விலை உயர்வால் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 400க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர நூற்பாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பருத்தி உற்பத்தி நடப்பாண்டில் மிகவும் குறைந்தது. இதனால், பஞ்சின் விலை அபரிமிதமாக அதிகரித்துள்ளது.

பருத்தி உற்பத்தியின் விளைச்சலை துல்லியமாக அளவிடுவதற்கு அரசிடமோ, தனியாரிடமோ சரியான புள்ளி விவரங்கள் இல்லை. பருத்தி உற்பத்திக்காலம் ஆரம்பமானதும் பஞ்சு மொத்த வியாபாரிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் அதிகளவில் பஞ்சை கொள்முதல் செய்து கையிருப்பில் வைத்துக் கொண்டுள்ளன. வெளிநாடுகளுக்கும் பஞ்சு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நூற்பாலைகளில் நாள்தோறும் உற்பத்தியாகும் 40 இலட்சம் கிலோ நூல் உற்பத்தி பாதிக்கப்படும். 400 நூற்பாலைகளை நம்பியுள்ள சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பை சந்திப்பர் என கூறப்படுகின்றது.

காந்திநகர்

## தெருநாய்கள் விரட்டியதால்

# ஆழ்துளைக்குள் விழுந்த சிறுவன்

பஞ்சாப் மாநிலம், ஷோஷியார்பூர் அருகே கியாலா கிராமத்திலுள்ள வயலில் 6 வயது சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, அங்கிருந்த சில தெருநாய்கள் சிறுவனை துரத்தியுள்ளன. நாய்களிடமிருந்து தப்பிக்க அந்தச் சிறுவன் ஓடியுள்ளான்.

சணல் பையால் மூடப்பட்டிருந்த 100 அடி ஆழ்துளை கிணற்றில் சிறுவன் எதிர்பாராத விதமாக விழுந்துள்ளான்.

நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை கேள்வியுற்றதும்



விரைந்து வந்த பொலிஸ் அதிகாரிகள் சிறுவனை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சிறுவனுக்கு தொடர்ந்து ஒக்சிஜன் அளிக்கப்பட்டு வருகிறது. அவசர சேவைக்காக மருத்துவக் குழுக்களும் தயார் நிலையில் உள்ளன.

இந்தியா

# 75% ஊழியர்கள் பணிநீக்கம்

இந்தியா 'ஸ்டார்ட்அப்' நிறுவனங்கள் அடுத்தடுத்து தனது ஊழியர்களைக் கொத்துக் கொத்தாகப் பணிநீக்கம் செய்து வருகின்றது.

இந்நிலையில், பெங்களூரைச் சேர்ந்த டிஜிட்டல் ஹெல்த்கேர் சேவை நிறுவனமான Mfine மொத்த ஊழியர்கள் எண்ணிக்கையில் 75 சதவீத ஊழியர்களைப் பணிநீக்கம் செய்துள்ளது.

புதிய முதலீடுகள் பெரிய அளவில் குறைந்துள்ள காரணத்தாலும், போட்டி அதிகரித்துள்ளதாலும், பண இருப்பு அதிகளவில் குறைந்துள்ளதாலும் பல முன்னணி நிறுவனங்கள் பணம் இல்லாமல் திவால் ஆகும் நிலையைத் தவிர்க்க, ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



ரியாத்

## 16 நாடுகளுக்கு
# சவுதி பயணத் தடை

கொரோனா பாதிப்பு அதிகரிப்பதால் 16 நாடுகளுக்கு சவுதி அரேபியா பயண தடை விதித்தது. சவுதி மக்கள், இந்தியா, பெலாரஸ், ஆப்கான், இந்தோனேசியா உள்ளிட்ட 16 நாடுகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதல் மற்றும் 2 ஆவது கொரோனா அலையில் அதிக பாதிப்புகளும், உயிரிழப்புகளும் ஏற்பட்டன. பரவலை கட்டுப்படுத்த போக்குவரத்து தடை உள்ளிட்ட கடுமையான ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

இதேபோன்று விமான போக்குவரத்தும் முற்றிலும் நிறுத்தப்பட்டது. விதிவிலக்காக, வெளிநாடுகளில் சிக்கி தவித்த இந்தியர்களை மீட்பதற்காக விமான சேவை தொடர்ந்தது. இந்தியாவில் கொரோனா பரவலின் 3வது அலை ஏற்பட்டு பின்னர், சமீப காலங்களாக வெகுவாக குறைந்து கட்டுக்குள் இருந்தது. இந்நிலையில், இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் சமீப நாட்களாக கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனை கவனத்தில் கொண்டு, சவுதி அரேபிய அரசு இந்தியா உள்ளிட்ட 16 நாடுகளுக்கு பயணம் செய்ய தனது குடிமக்களுக்கு தடை விதித்து உள்ளது.



காபூல்

## தொலைக்காட்சிகளில் பெண் செய்தி வாசிப்பாளர்களின்
# கண்கள் மட்டுமே தெரிய வேண்டும்

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து தொலைக்காட்சிகளிலும் பெண் செய்தி வாசிப்பாளர்கள் கண்கள் மட்டும் வெளியே தெரியும் வகையில் முகத்தை பர்தாவால் மூடியபடி திரையில் வர வேண்டும் என்ற தலிபான் அரசின் உத்தரவு நடைமுறைக்கு வந்தது.

ஆப்கானில் உள்ள அனைத்து பெண்களும் பொது இடங்களில் முகத்திரை அணிய வேண்டும் என்றும் அவ்வாறு அணிய மறுத்தால் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்றும் 2 வாரங்களுக்கு முன்பு தலிபான்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இதற்கு ஆப்கானில் உள்ள மகளிர் அமைப்பினர் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், தொலைக்காட்சிகளில் பெண் தொகுப்பாளர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் திரையில் தோன்றும் போது, முகத்தினை கட்டாயம் மறைக்க வேண்டும் என்று மே. 18 ஆம் திகதி தாலிபான்கள் புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்தனர். இது குறித்த தாலிபான்களின் நகல் அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா

## குவாட் சந்திப்புக்கு முன்னதாக
# பதவியேற்ற புதிய பிரதமர்

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக அந்தனி அல்பனிஸ் பதவியேற்றதுடன் உடனடியாகவே ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஜப்பானை உள்ளடக்கிய குவாட் நாடுகளின் தலைவர்களின் சந்திப்புக்காக ஜப்பானின் தலைநகர் டோக்கியோவுக்குச் சென்றுள்ளார்.

பெரும்பான்மையையோ அல்லது எதிரணியிலுள்ளவர்களின் ஆதரவுடன் பிரதமர் ஆள்வார் என்பது தெளிவில்லாமலுள்ளது.

வெளிநாட்டமைச்சர், வேலைவாய்ப்பு அமைச்சரான பிரதிப் பிரதமர், திறைசேரிப் பொறுப்பாளர், நிதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபருடனேயே



பிரதமர் அந்தனிஸ் பதவியேற்றிருந்தார்.

பிரதமர் அந்தனிஸின் தொழிலாளர் கட்சியானது 72 ஆசனங்களை வென்றபோதும், பெரும்பான்மைக்குத் தேவையான 76 ஆசனங்களை அக்கட்சி கொண்டுள்ளதாக எனத் தீர்மானிக்க வாக்கெண்ணிக்கை தொடருகிறது.

கனடா

# புயல்களால் நால்வர் பலி

கிழக்கு கனேடிய மாகாணங்களான ஒன்ராறியோ, கியூபெக்கை மோசமான புயல்கள் தாக்கியதையடுத்து நான்கு பேர் உயிரிழந்ததோடு, மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் சிதிலங்கள் வீதிகளில் சிதறிக் கிடந்ததுடன், வீடுகளையும், கார்களையும் வீழ்ந்த மரங்கள் சேதப்படுத்தியுள்ளன.





பாகிஸ்தான்

# தலைநகர் மீதான பேரணிக்கு கான் அழைப்பு

புதிய தேர்தல்களுக்கு அழுத்தம் வழங்குமாறு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தை நோக்கி அமைதியாக நாளை பேரணியாகச் செல்லுமாறு தனது ஆதரவாளர்களுக்கு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அழைப்பு விடுத்துள்ளார்.

நம்பிக்கையில்லா வாக்கெடுப்பொன்றின் மூலம் பாராளுமன்றத்தில் பதவியிலிருந்து அகற்றப்பட்ட கான், இஸ்லாமாபாத்துக்கு பலத்தைக் காண்பிக்கும் பொருட்டு சில நகரங்களில் பேரணிகளை நடத்தியுள்ளார்.

உக்ரேன்

## கிழக்கு உக்ரேனில்
# புதிய ரஷ்ய தாக்குதலைத் தடுத்து நிறுத்தினோம்–உக்ரேன்

கிழக்கு உக்ரேனிய நகரான சிவிரொன்டெஸ்க் மீதான புதிய தாக்குதலை தடுத்து நிறுத்தியதாக உக்ரேன் நேற்று(23) தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் மரிபோலை ரஷ்யப் படைகள் கைப்பற்றிய பின்னர் சிவிரொன்டெஸ்கே ரஷ்யாவின் பிரதான இலக்காகக் காணப்படுகிறது.

சிவிரொன்டெஸ்குக்குள் ரஷ்யப் படைகள் நுழைய முயன்றதாகவும், ஆனால் அது வெற்றியளிக்கவில்லை என்றும், பின்வாங்கியதாகவும் உக்ரேனிய ஜனாதிபதி வொலடீமர் ஸிலென்ஸ்கியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.






## இங்கிலாந்து பிறீமியர் லீக்:
# சம்பியனானது மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் சிற்றி சம்பியனானது.

தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அஸ்டன் வில்லாவுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே சிற்றி சம்பியனானது.

அஸ்டன் வில்லாவின் மட்டி கஷ், பிலிப் கோச்சினோ பெற்ற கோல்களின் மூலம் 75ஆவது நிமிடம் வரைக்கும் பின்தங்கியிருந்த சிற்றி, அடுத்த ஐந்து நிமிடங்களில் இல்கி குன்டோகனின் இரண்டு கோல்கள், றொட்றியின் கோல் மூலமே 3-2 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் லிவர்பூல் 92 புள்ளிகளைப் பெற்றிருந்த நிலையில், சிற்றி 93 புள்ளிகளைப் பெற்றிருந்தது. இதேவேளை, கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றிருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றிருந்தது.

அந்தவகையில், சிற்றிக்கு அடுத்ததாக 74 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் செல்சியும், 71 புள்ளிகளுடன் நான்காமிடத்தை டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் பெற்றுக் கொண்டன.



## ஐ.பி.எல்:
# சண்றைசர்ஸை வென்ற பஞ்சாப்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், ககிஸோ றபாடா, ஹர்பிறீட் பிறார் (3), நாதன் எலிஸிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அபிஷேக் ஷர்மா 43 (32), றொமாறியோ ஷெப்பர்ட் ஆட்டமிழக்காமல் 26 (15), வொஷிங்டன் சுந்தர் 25 (19) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், லியாம் லிவிங்ஸ்டோனின் ஆட்டமிழக்காத 49 (22), ஷிகர் தவானின் 39 (32), ஜொனி பெயார்ஸ்டோவின் 23 (15), ஜிதேஷ் ஷர்மாவின் 19 (07), மொஹமட் ஷாருக் கானின் 19 (10) ஓட்டங்களோடு 15.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பஸல்லக் பரூக்கி 4-0-32-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ஹர்பிறீட் பிறார் தெரிவானார்.

இந்நிலையில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது தகுதிகாண் போட்டியில் குஜராத் டைட்டான்ஸும், ராஜஸ்தான் றோயல்ஸும் மோதவுள்ளன.







## கலாமன்றம் பிறீமியர் லீக்:
# சம்பியனானது சூரியா சுப்பர் கிங்ஸ்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கலாமன்றம் விளையாட்டுக் கழகமும், 'பி.பி.கே பார்ட்னர்ஷிப்' வீரர்களும் பங்குபற்றிய கலாமன்றம் பிறீமியர் லீக் தொடரில் சூரியா சுப்பர் கிங்ஸ் சம்பியனானது.

முத்துத்தம்பி மகா வித்தியால மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பவர் கிட்டர்ஸை வென்றே சுப்பர் கிங்ஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் கிட்டர்ஸ், 10 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 58 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிங்ஸ் 7.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

## இத்தாலிய சீரி ஏ தொடர்:
# சம்பியனானது ஏ.சி மிலன்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில் ஏ.சி மிலன் சம்பியனானது.

சஸூலோவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் மிலன் வென்றமையைத் தொடர்ந்தே அவ்வணி சம்பியனானது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகளுடன் மிலன் முதலாமிடத்தைப் பிடித்ததோடு, 84 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தை இன்டர் மிலன் பிடித்திருந்தது. நாப்போலி 79 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும், ஜுவென்டஸ் 70 புள்ளிகளுடன் நான்காமிடத்தைப் பிடித்திருந்தது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 24 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.